137

# GNANA-KUMMI

*On Creation, Idolatry, Salvation by Christ, Heavenly Bliss; and the pains of Hell.*

FIRST EDITION—5,000.

# ஞானக்கும்மி.

இஃது

முன் தருமபுரம் ஆதீன வித்துவான்

ஆறுமுகத் தம்பிரான்

என்று சொல்லப்பட்டு,

பின்பு

வெஸ்லி ஆபிரகாம்

என்னும் பெயர்பெற்றவர்

பாடியது.

MADRAS:

PRINTED FOR THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY,

By H. W. Laurie, Christian Knowledge Society's Press,

18, Church Street, Vepery.

1870.

**No. 116.** *Four Pie.* ௪ பை.

# வேதவாக்கியங்கள்.

அறியாமையுள்ள காலங்களைப் பராபரன் காணாதவர்போல் இருந்தார்; இப்பொழுது மனந்திரும்ப வேண்டும் என்று எவ்விடத்திலுள்ள மனிதர் யாவருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்தார்; அதிலே அவர் தாம் நியமித்த ஒருவனைக் கொண்டு பூச்சக்கரத்திலுள்ள யாவருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுப்பார்; அவனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே, அவர் அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்.

அப்போ. 17. 30, 31.

பிரபுக்களையும், இரட்சிப்பில்லா மனுப்புத்திரனையும் நம்பாதிருங்கள். அவனுடைய ஆவி புறப்படும், தன் மண்ணுக்குத் திரும்புகிறான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழியும். யாக்கோபின் பராபரனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ளவை எல்லாவற்றையும் உண்டாக்கின தன் பராபரனாகிய கர்த்தரின்மேல் தன் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்.

சங்கீதம், 146. 3—5.

M.R.T. & B.S. GENERAL SERIES. No. 116.

# GNANA-KUMMI.

# ஞானக்கும்மி.

## ஜெக உற்பத்தி.

எபிரேயர், க. ௰.

"கர்த்தாவே! நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கைகளின் கிரியைகளாயிருக்கிறது."

க சீர்ஞானக்கும்மித் தமிழ்பாடச் சர்வ
சீவதயாபரன் காப்பாமே
பார்ஞானசத்திய வேதச்சுடரெங்கும்
பாய்ந்தொளிசெய்யுமே ஞானப்பெண்ணே.

உ எங்கணுமுள்ளவை யாவும்படைத்த
ஏகபராபர னாகியெங்குந்
தங்குமவர்கர்த்த ரானவர்என்றே
சங்கீதம்பாடுவாய் ஞானப்பெண்ணே.

ங அல்லும்பகலும் பராபரன்பாதம்
அடுத்துவணங்கியே சங்கீதத்தால்
அல்லேலூயா அல்லேலூயாவென்றவர்
ஆனந்தம்பாடுவாய் ஞானப்பெண்ணே.

ச திரித்துவமான பரிசுத்தரட்சகர்
தேசத்தில் அஞ்ஞானத்தோரையெல்லாம்
பொறுத்துரட்சிக்கும் கர்த்தர்அவரது
புகழினைப்பாடுவாய் ஞானப்பெண்ணே.

௫ சாந்தகுணத்தவர் ஏந்துகரத்தவர்
தாம்பாடுபட்டவர் தம்பதமே
சேர்ந்திடுங்கிறிஸ்தவர் பாடுஞ்சங்கீதச்
சிறப்பினைக்காண்பாயே ஞானப்பெண்ணே.

௬ இப்படியெல்லா உலகோரும்போற்றிட
எங்குந்நிறையொளி யானஅரூபியை
மெய்ப்படியேயெவர் சொல்லத்துணியலாம்
வேதஞ்சொல்லக்கேள் ஞானப்பெண்ணே.

௭ ஆதியிலாழப் புனல்மேலேயொளி
யாயசைவாடும் பராபரன்றான்
மேதினிதன்னைப் படைப்பதற்கேசித்தம்
மெத்தவுங்கொண்டாரே ஞானப்பெண்ணே.

௮ அந்தத்திருச்சித்தந் தன்னிலுறும்வார்த்தை
யானதுதானே பராபரனும்
தங்கும்பராபர னாகியரட்சகர்
தானானதற்புதம் ஞானப்பெண்ணே.

௯ அப்பொழுதேக பராபரனானவர்
அண்டபிண்டங்கள் படைக்கவெண்ணி
செப்பிடும்வானின்கீழ்த் தங்குநீர்ஓர்புறஞ்
சேரச்செய்தார்அம்மா ஞானப்பெண்ணே.

௰ சேரும்நீர்தன்னைச் சமுத்திரமென்றுந்
தெரிந்தமண்மேட்டினைப் பூமியென்றுஞ்
சாருமிரவி மதியுடுபல்விதத்
தாலொளியாக்கினர் ஞானப்பெண்ணே.

௰௧ பகலிரவென்று பிரித்ததற்காகப்
பகலினுக்காகும் பகலவனும்
புகலிரவிற்குச் சசிதாரகையைப்
பொறுப்பாகவைத்தாரே ஞானப்பெண்ணே.

௰௨ அப்புறம்தாவரம் பட்சிமச்சங்கள்
அகிலஊர்வனவோடு விலங்குகள்
செப்பமதாகப்படைத்தபின் மாந்தரைச்
செய்தார்தம்சாயலில் ஞானப்பெண்ணே.

௰௩ முப்பொருளோர்ஆதாமைப் படைத்தவன்
முசித்துநித்திரை செய்கையிலே
ஒப்பாயவன்விலா வெலும்பெடுத்துப்பெண்
உருவாகச்செய்தாரே ஞானப்பெண்ணே.

௰௪ அப்படிபெண்ணான ஏவாளை
ஆதாமுக்குத் துணையாக்கி
ஒப்புடன்தோட்டத்தி லன்னவரைவைத்தே
உண்மைசிலசொன்னார் ஞானப்பெண்ணே.

௰௫ நாலுபக்கத்துக் கனியையும்நீங்கள்
நலமாய்ப்புசித்திட லாகுமென்று
மேலும்நன்மைதீமை யறியுங்கனி
விரும்பவேண்டாமென்றார் ஞானப்பெண்ணே.

௰௬ அப்படிசொல்லி யகன்றபின்சாத்தான்
அரவமாக ஏவாளிடம்வந்து
மெய்ப்படியுங்கள் விருப்பந்தருங்கனி
வேறுளவென்றான் ஞானப்பெண்ணே.

௰௭ அக்கனிதன்னைப் புசித்தபின் ஆண்டவர்
ஆதாம்ஏவாளொடு பாம்பலகைக்கும்
தக்கபடிகொடிதாக வெகுசாபந்
தான்கொடுத்தாரடி ஞானப்பெண்ணே.

௰௮ அந்தப்படிநன்மை தீமைகளாகும்
அருங்கனிஉண்டிடு சாபங்களால்
வந்துபிறந்தவர் துன்பங்கள்பட்டு
மரிக்கவுமாச்சடி ஞானப்பெண்ணே.

௰௯ ஆறுநாள்தன்னிலே வெவ்வேறாய்ப்பிரித்
தாண்டவரெல்லாம் படைத்தபின்னர்
இரேழாம்நாளைப் பரிசுத்தமாக்கிய
இரக்கத்தைப்பாரடி ஞானப்பெண்ணே.

# அஞ்ஞானம்.

ரோமர், க. ௨௧—௨௩.

"அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், நன்றியறியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனிதர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகளாகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்."

௨௰ அவ்விதஉண்மைசொல் லாண்டவர்கட்டளை
மீறும்அரும்பாவச்சந்ததிதான்
வெவ்வேறுஞ்சாதியுந் தொழில்களுமாக
வெகுபிரிவாச்சுதே ஞானப்பெண்ணே.

௨௧ பெண்களைத்தெய்வமென் றெண்ணிடுமார்க்கமும்
பேய்களைத்தெய்வமென் றெண்ணிடுமார்க்கமும்
விண்படர்சூரியனைத் தெய்வமென்கிற
வேடிக்கைமார்க்கமும் ஞானப்பெண்ணே.

௨௨ சந்திரனைத்தெய்வமா யெண்ணுமார்க்கமுஞ்
சாரக்கினிதெய்வமா யெண்ணுமார்க்கமும்
இந்திரனைத்தெய்வமா யெண்ணுமார்க்கமும்
இன்னஞ்சொல்லக்கேள் ஞானப்பெண்ணே.

௨௩ மீனாமைபன்றி நரசிங்கம்வாமனம்
மேலும்பரசுராமன் பலராமன்
தான்கோபன்ராமனைக் கற்கியைத்தெய்வமாய்ச்
சாற்றினர்பாரடி ஞானப்பெண்ணே.

௨௪ பிரமன்கணபதி கந்தன்வயிரவன்
பேரகோரவீர பத்திரனையனார்
வீரவும்கொடிய சிவனைத்தேவென்றிடும்
வீண்பேய்கள்வேடிக்கை ஞானப்பெண்ணே.

௨௫ கருங்கல்லைச்செங்கல்லைச்சுண்ணாம்பைவெல்லத் [தைக்
காட்டுமரமண் கண்ணாடிப்படங்களை
பெருஞ்சுவர்ச்சித்திர மாம்படச்சித்திரம்
பேய்த்தெய்வங்காண்பாயே ஞானப்பெண்ணே.

௨௬ பொன்வெள்ளிசெம்புடன் வெண்கலம்பித்தளை
போகுமெழுக்குடன் பீங்கானும்
நன்னயமான நவரத்தினரசத்
தாலுருக்காண்பாரே ஞானப்பெண்ணே.

௨௭ இதயஞ்சிரமுறை மாமணல்சந்தனம்
எள்குசைபூதிஅக்கங் கொன்றைவில்வநீர்
மிதிசாணம்பால்கும்ப மாகுமிவையெல்லாம்
மேலானபூசையாம் ஞானப்பெண்ணே.

௨௮ சிவனில்லாவுரு வங்களைச்செய்து
சிறப்பானகோயில்கள் கட்டிவைத்து
பாவங்கள்போக்கும் நதிகள்தீர்த்தங்களாய்ப்
பாடிவைத்தாரடி ஞானப்பெண்ணே.

௨௯ கோபுரங்கள்சுற்று மாமதிற்பொம்மைகள்
கொடிக்கம்பமாம்பெரு மண்டபஞ்சித்திரம்
தீபங்கள்வெவ்வேறு வேடிக்கையாகச்
சிறக்கவைத்தாரடி ஞானப்பெண்ணே.

௩௰ பல்லக்குமஞ்சங்கள் வாகனங்கள்
பருந்தேரும்பலவிதம் பண்ணிவைத்தார்
சொல்லும்பலவகை வாத்தியசத்தங்கள்
சூழவைத்தாரடி ஞானப்பெண்ணே.

௩௧ தாசிகளாடிய வேடிக்கையுங்கொடுஞ்
சங்கீதம்பாடிடும் வேடிக்கையும்
பேசுந்திருவிழா வேடிக்கையெல்லாம்
பெருகவைத்தாரடி ஞானப்பெண்ணே.

௩௨ தீவட்டிமத்தாப்பு வாணங்களோடு
சிறக்கும்வெடிக ளெடுபிடிகள்
மேவுந்தெருக்களில் தோரணமாம்வெகு
வேடிக்கைகாண்பாயே ஞானப்பெண்ணே.

௩௩ சொல்லுஞ்சுருதியி லாகாசந்தன்னிலுந்
தோன்றும்பராபரன் றானிருப்பாரல்லால்
கல்லினுஞ்செம்பினுமோ இருப்பாரென்று
காட்டினர்பாரடி ஞானப்பெண்ணே.

௩௪ உளியிட்டகல்லு முருக்கொண்டசாந்துமே
ஓங்கும்பராபர னாகாதென்றும்
புளியிட்டசெம்பும் பொருளாகாதென்றுமெய்
போற்றச்சொன்னாரடி ஞானப்பெண்ணே.

௩௫ நட்டகல்லைத்தெய்வ மென்றுநாற்பூவிட்டு
நானாவிதமந்திரம் சொல்லித்தொழ
நட்டகல்லுந்தெய்வ மாகமாட்டாதென்று
நாட்டினர்பாரடி ஞானப்பெண்ணே.

௩௬ பண்டுபறித்திட்ட பன்மலரானதும்
பாழிற்செபித்திட்ட மந்திரங்கள்
கண்டுவணங்கிய கோயில்கள்தீர்த்தங்கள்
கானனீராச்சுதே ஞானப்பெண்ணே.

௩௭ எட்டுத்திசையும் பதினாறுகோணமும்
எங்கும்நிறைந்த பராபரனாகவே
கட்டுப்படுமுரு வத்தைவணங்கிடுங்
காரணமென்னடி ஞானப்பெண்ணே.

௩௮ இப்படிபட்டணத் தார்சிவவாக்கியர்
இன்னும்வெகுபெரி யோருரைத்தார்
தப்பிதமாமுரு வங்களுமந்திரஞ்
சாத்திரம்வேதமேன் ஞானப்பெண்ணே.

௩௯ பின்னுமவர்கள்செய் தந்திரமானது
பேசவென்றால்வெகு வாய்விரியும்
இன்னுமதுதனி லேசிலகாரியம்
இப்போதுசொல்லக்கேள் ஞானப்பெண்ணே.

௪௰ சாதிகணான்கென்றும் *ஆச்சிரமங்கள்
தவிராதமார்க்கங்க ணான்காமென்றும்
நீதிசேர்மேலாம் பதவிகணான்கென்றும்
நிலையாகச்சொன்னாரே ஞானப்பெண்ணே.

௪௧ வேதங்கணான்கு மேற்சாத்திரமாறும்
விரிவாம்புராணம் பதினெட்டுமாம்
பேதங்களாகும் இருபத்தெட்டாகமப்
பேருங்கொடுத்தாரே ஞானப்பெண்ணே.

௪௨ உபநிடதங்க ளனேகமாமென்றும்
உறுசிவன்சொன்ன ரகசியமும்
பவங்களைப்போக்கின்ற கீதைகள்பாரதம்
பாடிவைத்தாரடி ஞானப்பெண்ணே.

௪௩ இராமசரிதைகள் வாசிட்டங்கைவல்யம்
இன்னும்பெருமகா வாக்கியமும்
தராதலமெல்லாங் கெடுப்பதற்காகவே
சாற்றினர்பாரடி ஞானப்பெண்ணே.

௪௪ சத்தகோடிமகா மந்திரமாமென்றுஞ்
சந்தியநுட்டானம் பூசையென்றும்
வித்தகமாகிய மார்க்கத்தையெங்கும்
விரித்துவைத்தாரடி ஞானப்பெண்ணே.

௪௫ ஊர்வனசாதி பதினைந்துலட்சம்
ஒன்பதுலட்சங்கள் மானிடராம்
நீர்வாழ்ச்சாதிகள் பத்துலட்சமுடன்
நேர்கண்டுசொன்னாரோ ஞானப்பெண்ணே.

௪௬ விலங்குமிருகங்கள் பத்துலட்சமுடன்
மேலாம்பறவைகள் பத்துலட்சம்
துலங்குதேவர்கள் பதினொருலட்சமாய்த்
தோன்றும்படிசொன்னார் ஞானப்பெண்ணே.

௪௭ தாவரசாதிபத் தொன்பதுலட்சஞ்
சதுர்த்தொகை யெண்பத்துநான்குலட்சம்
மேவிடும்யோனி பேதங்களாகக்கண்டு
விரித்துவைத்தாரடி ஞானப்பெண்ணே.

௪௮ அண்டசம்மான சராயுசமெங்கும்
அடுத்தசுவேதச முற்பிசமும்
எண்டருநால்வகைத் தோற்றமெழுபிறப்
பேற்றியுஞ்சொன்னாரே ஞானப்பெண்ணே.

௪௯ வருஷமறுபது மாதம்பனிரண்டு
வாரங்களேழுமேற் பட்சமிரண்டு
பெருகியநட்சத்திர மிருபத்தேழாய்ப்
பேர்கொடுத்தாரடி ஞானப்பெண்ணே.

௬௰ லக்கினமானதுவே பன்னிரண்டாகும்
நேராங்கிரகங்க ளொன்பதுமாம்
தக்கதிதிகள் பதினைந்துமாகவே
சாற்றினர்பாரடி ஞானப்பெண்ணே.

௬௧ யோகங்கரணம் அமாவாசியாகும்
பறுவந்தியாச்சியம் ராவுகாலம்
ஆகியபஞ்சகம் யோகினியாமே
அடுக்குஞ்சகுனமாம் ஞானப்பெண்ணே.

௬௨ இப்படியேயவர் பல்விதமாகவே
யேற்படுத்திச்சொல்வ தல்லாமல்
மெய்ப்படியாகுஞ் சரீரத்தின்கூறுகள்
மேலுரைப்பாரடி ஞானப்பெண்ணே.

௬௩ வியாதிப்பெருக்கம் நாலாயிரம்நானூறு
நாற்பத்தெட்டாக விளைந்ததென்றும்
வயாவாஞ்சரீரத்தின் ஒன்பதுவாசலும்
மார்க்கமென்றாரடி ஞானப்பெண்ணே.

௬௪ நாளொன்றுக்காகுஞ் சுவாசமிருபத்தோ
ராயிரமேலறு நூறாகும்
ஆளானநாடி யெழுபத்தோராயிர
மாகவுஞ்சொன்னாரே ஞானப்பெண்ணே.

௬௫ உரோமங்கள்மூன்றரைக் கோடியென்றும்
உற்றிடும்வாயுக்கள் பத்தாமென்றும்
விராவிடுந்தந்தங்கள் முப்பத்திரண்டாக
மேலுமுரைத்தாரே ஞானப்பெண்ணே,

௬௬ தத்துவந்தொண்ணூற் றாறதென்றுஞ்
சரீர்த்தின்பேதம் அநந்தமென்றும்
வித்தகமாகிய கன்மத்தினாலே
விரிந்ததென்பாரடி ஞானப்பெண்ணே.

௬௭ கன்மவிதங்க ளநந்தமென்றும்நற்
கடவுளைவிலக்கக் கூடாதென்றும்
சொன்னஅஞ்ஞானப் பசாசுகள்தந்திரம்
சுத்தப்பொய்யாமடி ஞானப்பெண்ணே.

டுவு கன்மங்களெல்லா முடிக்குமென்றுலக்
கடவுளுலகினுக் கென்செய்வது
தின்மையதாகிய கன்மக்கடவுளைத்
தேடிக்கொண்டாரடி ஞானப்பெண்ணே.

டுகூ குலங்களுஞ்சைவமுங் கோலமுஞ்செய்கையுங்
கொண்டுபலவித மார்க்கமதாய்
நலங்களிலாத கிரியைகள்செய்து
நரகினுக்கேகுவார் ஞானப்பெண்ணே.

கூ0 இவ்விதமாயவர் சொன்னகுலங்களும்
ஏற்றகிரியைகள் வெவ்வேறாய்ப்
பௌவமதான பிறப்புநடத்தையும்
பலவிதமாச்சடி ஞானப்பெண்ணே.

கூக ஆதிகாலத்தி லிருகுலமாகவே
அன்றுபராபரன் செய்திருக்க
மேதினிஅஞ்ஞானப் பேய்க்குலமான
வெகுவிதங்கேளடி ஞானப்பெண்ணே.

கூ௨ குண்டகர்கோளகச் சாதியென்றும்
குலீனரநுலோமச் சாதியென்றும்
கண்டபிரதிலோமச் சாதியுமேற்
கானீனச்சாதியாம் ஞானப்பெண்ணே.

கூ௩ இப்படிப்பட்டகுலம் பதினெட்டென்றும்
ஏற்றிடும்நற்குலம் நான்காமென்றும்
தப்பிதமாகிய பார்ப்பார்கட்டின
சாத்திரமாமடி ஞானப்பெண்ணே.

கூ௪ வைணவச்சாதியும் வைதிகச்சாதியும்
மார்க்கங்கள்கெட்ட நடத்தைகளாம்
பயணவழியவர் பூசையின்பெட்டியைப்
பார்க்கத்தெரியுமே ஞானப்பெண்ணே.

கூடு செம்புடன்கம்பிளி யெம்பெருமான்றெய்
வம்பாதேயமுடன் பாதரட்சை
சம்பாரப்புளி யோதனந்தோசை
தயிரனமிட்டவி ஞானப்பெண்ணே.

கூகூ சத்திபூசைக்குத் தருங்குலம்பார்ப்பார்
சாராயங்களுடன் மாமிசங்கள்

மெத்தப்புசித்தவர் பெண்டுகள்செய்யும்
விபசாரம்மேன்மையாம் ஞானப்பெண்ணே.

௯௭ வேதங்களோதிப் பொருளறியாரவர்
மெத்தக்குலேத்துக் கதறிடுவார்
சாதியுந்தானமுந் தங்கட்குரிதென்று
சண்டைகள்போடுவார் ஞானப்பெண்ணே.

௯௮ சாதியுந்தெய்வமும் வேதமும்பொய்யவர்
சைவமுஞ்சாத்திர மார்க்கமும்பொய்
நீதியுமாச்சிரமங்களும் பொய்யாகும்
நிச்சயம்பாரடி ஞானப்பெண்ணே.

௯௯ கொலேகளவாசை பொய்மோசகாசங்கள்
கொண்டுபலவிதப் பாவங்களால்
நலமிலாக்கற்சிலே தன்னேவணங்கி
நரகத்திற்கேகுவார் ஞானப்பெண்ணே.

௱ வேசியர்பிள்ளேகள் கூடிக்கிறிஸ்துவின்
மேன்மைபொருந்திய மார்க்கமதைக்
கூசாமற்பொய்களேத் தூஷணமாகக்
கொலேப்பார்கள்பாரடி ஞானப்பெண்ணே.

௱௧ இப்படிமாதிரள் பாவங்கள்செய்து
இருளடைந்த அஞ்ஞானிகளால்
மெய்ப்படியான பராபரனுள்ளம்
வெகுளியுண்டானது ஞானப்பெண்ணே.

## இரட்சகர் அவதாரம்.

அப்போஸ்தலர், ச. ௰௨.

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பில்லே; நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின்கீழெங்கும் மனிதர்களுக்குள்ளே அவருடைய நாமமே யல்லாமல் வேறொரு நாமம் கட்டளேயிடப்படவுமில்லே."

௱௨ எல்லாமார்க்கமும் பொய்யாகும்எங்கட்
கேற்றகுருவாங் கிறிஸ்துவின்றன்
நல்லகுலமுமெய் மார்க்கமுமாய்ப்பரன்
நாட்டிவைத்தாரடி ஞானப்பெண்ணே.

௭௩ சத்தியவேதமுமாஞ் சுவிசேஷமுஞ்
சங்கீதமும் ஞானப்பாட்டுகளும்
நித்தியமானநல் மோட்சந்தருஞ்செபம்
நிச்சயமாமடி ஞானப்பெண்ணே.

௭௪ சாதியின்மேலாங் கிறிஸ்தவர்தாங்கள்
சாற்றும்பராபரனே தெய்வமாம்
மேதினிக்குண்மைய தானதுசத்திய
வேதச்சுவிசேஷம் ஞானப்பெண்ணே.

௭௫ துரைத்தனமன்னவர் இங்கிலிஷ்காரத்
துரைகளெப்போது மகிழ்ந்திருப்பார்
கருத்தர்அவர்களின் முன்பாகவேநின்று
காத்திடுவாரடி ஞானப்பெண்ணே.

௭௬ ஆன்மகாருண்ய பராபரனவர்
அன்பாற்சுதன் பரிசுத்தாவி
மேன்மையினலே அவதரிக்கச்சித்தம்
மெத்தவுங்கொண்டாரே ஞானப்பெண்ணே.

௭௭ சீரோரும்பெத்திலே மானகர்தன்னில்
தேவகிருபைசேர் மாமரிபால்
பேர்பெறும்ரட்சகர் ஆயர்பாடிப்பெருந்
தொழுவத்தில்வந்தாரே ஞானப்பெண்ணே.

௭௮ அப்பொழுதேதேவ தூதர்வந்தற்புதம்
அங்குளபேருக் கறிவிக்கவே
மிக்கசுதனைப் பரவிவணங்கி
வெகுவாய்த்துதித்தனர் ஞான்ப்பெண்ணே.

௭௯ அப்படியாகாசந் தன்னிலேதாரகை
யானதுதோன்றி முன்னேநடக்க
முற்பெரியோர்கள் தெரிந்துவந்தாண்டவர்
முன்பணிந்தேத்தினர் ஞானப்பெண்ணே.

௮௰ தீர்க்கதரிசிகள் நானுன்குபேருமுன்
செப்பிடும்வார்த்தைக ளின்படியே
பார்க்கவேவந்தவர் போதகரென்று
பணிந்துவணங்கினர் ஞானப்பெண்ணே.

அக அஞ்ஞானிகட்குப் பராபரனிப்படி
அவதாரமாயினு ரென்றுணர்ந்து
மெய்ஞ்ஞானியோர்கள் வணங்கித்துதித்து
வெளிப்படப்போனார்கள் ஞானப்பெண்ணே.

அஉ நாசரேத்தூரில் வளர்ந்துபனிரண்டு
நல்லவயதினில் வேதியர்க்குத்
தேசம்விளங்கிடுஞ் சத்தியவேதத்
தெளிவையுணர்த்தினர் ஞானப்பெண்ணே.

அங தேசத்திலஞ்ஞான மார்க்கத்தையெல்லாந்
தெளிவாய்த்தன் சித்தத்திலேயறிந்து
நேசமதானபராபரன் உள்ளம்
நினைந்தபடிசெய்வார் ஞானப்பெண்ணே.

அச மூன்றுபத்தாண்டு வயதானபின்
முத்திப்பிரசங்கஞ் செய்துவந்தார்
காண்டற்கரிய பன்னிருசீஷராக்
கண்டெடுத்தாரடி ஞானப்பெண்ணே.

அரு தேசங்கள்பட்டணம் ஆலயமெங்குஞ்
சிறப்பாகும்வேதப் பிரசங்கத்தினல்
நேசமதாம்வெகு பேர்களெல்லாம்அதை
நிச்சயமாய்க்கண்டார் ஞானப்பெண்ணே.

அசு கூனர்செவிடர் முடவர்கள்ஊமையர்
குருடர்திமிர்வாதக் காரரையும்
வானவனூர்குண மாக்கிஎழுப்பினர்
மரித்தவர்தம்மையும் ஞானப்பெண்ணே.

அஎ இன்னம்வெகுவெகு அற்புதமானதை
எங்கெங்குஞ்செய்தது மல்லாமல்
சொன்னபடிஅவர் அற்புதங்கண்டபேர்
சூழ்ந்துகொண்டாரடி ஞானப்பெண்ணே.

அஅ அஞ்ஞானியான வெகுபேர்களாண்டவர்
அன்பினுக்காளாகி வந்தார்கள்
மெய்ஞ்ஞானமாகிய நல்லொழுக்கங்களை
வேண்டும்படிகொண்டார் ஞானப்பெண்ணே.

௮௯ இப்படியாகிய அற்புதக்காரியம்
எங்கெங்குங்கண்ட அஞ்ஞானிகள்சிந்தையில்
தப்பிதமாகிய எண்ணங்கள்தீரத்
தயவுசெய்தாரடி ஞானப்பெண்ணே.

௯௰ வேதத்தின்பாரக ரும்பரிசேயரும்
மேன்மையதாம்வெகு யூதர்களுஞ்
சூதுகள்செய்து கொலைத்தொழில்செய்யத்
துணிந்துவந்தாரடி ஞானப்பெண்ணே.

௯௧ அன்னவர்கூடி நினைத்திடுங்காரியம்
ஆண்டவருள்ளத்தி லேதெரிந்து
பன்னிருசீஷர்க் கறிவித்தமேன்மைகள்
பார்த்திடில்அற்புதம் ஞானப்பெண்ணே.

௯௨ ஆண்டவர்அப்பத்தை தம்மேனியென்றும்
அடுத்தரசத்தை இரத்தமென்றும்
வேண்டியசீஷர்க் கருளிக்கொடுத்திடும்
மேன்மையைப்பாரடி ஞானப்பெண்ணே.

௯௩ இன்னேரமென்னைப் பிடித்துக்கொலைசெய்ய
இப்பொழுதேவரு வாரவர்க்குப்
பன்னிருபேரி லொருவனென்னைப்பற்றி
யேகொடுப்பானென்றார் ஞானப்பெண்ணே.

௯௪ ஆண்டவர்சொன்ன படியவர்வந்தனர்
அன்பில்லாயூதாஸ் காரியோத்தும்
வேண்டும்படியவர்க் கேயவன்காட்டி
வெகுபாவஞ்செய்தாண்டி ஞானப்பெண்ணே.

௯௫ ஆண்டவர்தம்மைப் பிடித்தவரப்போ
அரும்பாவியோர்சபைக் கொப்புவித்தார்
வேண்டும்படியவர் நிந்தைகள்செய்துபின்
வேந்தனுக்கொப்பித்தார் ஞானப்பெண்ணே.

௯௬ போந்திபிலாத்தென்னும் பாதகனப்போது
பொல்லாததீர்ப்புகள் சொல்லிடவே
சாந்தமதாகிய இயேசுக்கிறிஸ்துவைத்
தான்துன்பஞ்செய்தாரே ஞானப்பெண்ணே.

௯௭ ஆண்டவர்சென்னியில் முண்முடிவைத்தவர்க்
கானசிவப்புச் சட்டையணிந்து
வேண்டும்படியவர் மேனியில்துன்பம்
வெகுவாகச்செய்தாரே ஞானப்பெண்ணே.

௯௮ இரட்சகர்தோளிற் சிலுவைசுமத்தி
இசைந்தகல்வாரி மலைதனிலே
நிச்சயமாகநிறுத்தி அவர்தமை
நேராகத்தூக்கினார் ஞானப்பெண்ணே.

௯௯ தேவன்தன்மேனியில் ஐந்துகாயங்கள்
சிறக்கஅறைந்தனர் அப்போது
மேவுங்குருதி வெளிப்பட்டஅற்புதம்
மெத்தவும்உண்டடி ஞானப்பெண்ணே.

௱ திருமேனிதன்னில் வருரத்தமானது
தேசத்தோர்பாவ மெல்லாம்போக்கிப்
பெருகுமனிதர்க்கு மோட்சங்கொடுத்திடும்
பேறதுவாச்சடி ஞானப்பெண்ணே.

௱௧ ஆண்டவர்அப்போ பராபரன்தன்னை
அழைத்துப்பிதாவென்னைக் கைவிட்டீரோ
வேண்டியகாரியந் தன்சுதனென்றல்
வெளிப்பட்டுதப்போது ஞானப்பெண்ணே.

௱௨ அத்தருணத்தினி லாண்டவர்ஆவி
அடங்கிடும் அற்புதம் ஆரறிவார்
கத்துமுலகத்தஞ் ஞானிகள்கண்டு
களிப்படைந்தாரடி ஞானப்பெண்ணே.

௱௩ அப்பொழுதாலயந் தன்னிலேகட்டிடும்
அந்தத்திரைச்சீலை தான்கிழிந்து
செப்பிடும்பூமி யதிர்ந்துமலைகள்
திரக்கவெடித்தது ஞானப்பெண்ணே.

௱௪ கல்லறையெல்லாந் திறக்கஅதிலே
கனமானபேர்க ளெழுந்திருந்தார்
நல்லபரிசுத்த பட்டணஞ்சென்றவர்
நன்மேனிகாட்டினார் ஞானப்பெண்ணே.

௱௫ யோசேப்பென்னு மொருசிஷனவன்
உயர்ந்திடும் ஆண்டவர்மேனிதன்னை
நேசமதாகுந்தன் கல்லறைவைத்து
நெடுங்கல்லால்மூடினான் ஞானப்பெண்ணே.

௱௬ அப்போதுசேவக ரானவரங்கேநல்
ஆண்டவர்கல்லறை காத்திருந்தார்
மெய்ப்படியாகிய அற்புதங்கண்டவர்
மெத்தப்பயந்தனர் ஞானப்பெண்ணே.

௱௭ ஆண்டவர்அற்புதங் கண்டஆசாரியர்
அச்சங்கள்கொண்டுபோய்ச் சேவகர்க்கு
வேண்டும்பொருளைக் கொடுத்துவெளிவிட
வேண்டாமென்றாரடி ஞானப்பெண்ணே.

௱௮ ஞானவொளித்திரு மேனியுடன்மூன்றும்
நாளிலுயிரோ டெழுந்திருந்து
மேன்மையதாகவே நாற்பதுநாள்புவி
மேலிருந்தாரடி ஞானப்பெண்ணே.

௱௯ அன்புள்ளசிஷருக் கானஉபதேசம்
அந்தரங்கத்தி லுபதேசித்துப்
பின்புபரமண்ட லத்தினுக்கேகிப்
பிதாவருள்பெற்றாரே ஞானப்பெண்ணே.

௱௰ பிதாவின்வலப்பா லிருந்திடும்ரட்சகர்
பின்னும்புவியோர் தமக்கிரங்கி
இதமாய்அவர்களை ரட்சிக்கத்தேவனை
எப்போதும்வேண்டுவார் ஞானப்பெண்ணே.

௱௰௧ இன்னும்புவிக்கவர் வந்துயிரோடே
யிருக்கின்றபேர்க்கு மரித்தோர்க்குஞ்
சொன்னசுருதிப் படிக்கவர்தீர்ப்பு
சொரிவாரென்றஞ்சடி ஞானப்பெண்ணே.

௱௰௨ புண்ணியத்தால்வரும் ஞானத்தின்மோட்சமும்
பொல்லாதபாவத்தி னல்வருந்துன்பமும்
எண்ணும்படியுல கோருக்கெல்லாமேல்
எடுத்துரைப்பேனடி ஞானப்பெண்ணே.

# மோட்சம்.

லூக்கா, ௰௩. ௨௯: ௧. கொரிந்தியர், ௨. ௯.

"கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும் இருந்து சனங்கள் வந்து, தேவனுடைய இராச்சியத்தில் பந்தியிருப்பார்கள்."

"தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை; காது கேட்கவுமில்லை; அவைகள் மனிதருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை."

௩௰௩ ஆண்டவர்ஞானவொளி ரூபமாமென்றும்
அப்படிமேலான ஞானமதை
வேண்டும்படிஇயேசு ரட்சகர்ஞானத்தை
மெய்யாகப்போதித்தார் ஞானப்பெண்ணே.

௩௰௪ ஞானம்பராபரன் ஞானமேரட்சகர்
ஞானமேமெய்வேதம் ஞானஞ்சுவிசேஷம்
மேன்மையதாகிய மோட்சமும்ஞானமே
மெய்யாகக்காண்பாயே ஞானப்பெண்ணே.

௩௰௫ ஞானமேசங்கீதம் ஞானமேதோத்திரம்
ஞானமேபாட்டுகள் ஞானமதே
மேன்மையதாகுஞ் செபந்தனைஞானத்தின்
மேன்மையைக்காண்பாயே ஞானப்பெண்ணே.

௩௰௬ ஞானம்பராபரனுரு மென்றுலந்த
ஞானத்தைஆராலுங் காண்பரிதாம்
இனங்கள்நீங்கிய அன்பர்கள்மெய்யாய்
இசைந்துகாண்பாரடி ஞானப்பெண்ணே.

௩௰௭ சத்தியம்நீதிதயவு பொறுமைமெய்
சற்குணமானவர் காண்பதல்லால்
மெத்தவிநோதஞ்செய் வேடிக்கைக்காரர்
விரும்பிக்காணாரடி ஞானப்பெண்ணே.

௩௰௮ உள்ளத்திலொன்றும் புறம்பொன்றும்வைத்து
உடலம்பிழைத்திட வந்தவன்பொய்க்
கள்ளக்கிறிஸ்தவனானவன் ஞானத்தைக்
காண்பரிதாமடி ஞானப்பெண்ணே.

௱௰௯ ரட்சகர்பாதத்தை மெய்யாகநம்பியே
இப்புவியோர்ஞானங் காண்பதல்லால்
பட்சமும்மெய்யன்பு மில்லாதபேர்ஞானம்
பற்றமாட்டாரடி ஞானப்பெண்ணே.

௱௨௰ அப்படியாகிய ஞானத்தைக்கொண்டுமெய்
ஆண்டவர்பாதத்தை நம்பிடுவோர்
மெய்ப்படியாகிய மோட்சவழியினில்
மேன்படுவாரடி ஞானப்பெண்ணே.

௱௨௧ அஞ்ஞானியோரவர் செய்தபவங்களை
ஆண்டவர்ஞானத்தினாற் பொறுத்தால்
மெய்ஞ்ஞானந்தன்னாற் பரமண்டலந்தனில்
வீற்றிருப்பாரடி ஞானப்பெண்ணே.

௱௨௨ ஞானமேமோட்சம் வேறுயெனாலு
விதத்திலும்மோட்சங் கிடையாது
ஞானத்தையல்லாற் சுகங்களும்வேறில்லை
நாடிக்காண்பாயடி ஞானப்பெண்ணே.

௱௨௩ ஞானியரெல்லாம் உடையவர்மேலான
நல்லுலகம் அவரைப்போற்றும்
மேன்மையதாகிய மோட்சம்அவரது
மேலவர்க்கென்குறை ஞானப்பெண்ணே.

௱௨௪ அப்படியாகிய ஞானியருள்ளம்
ஆண்டவரன்பைப் பிரியாது
செப்புமுலகத்தின் காரியமெல்லாந்
தெரிந்திருப்பாரடி ஞானப்பெண்ணே.

௱௨௫ ஞானியருள்ளம் நினைந்திடுங்காரியம்
நன்றுயாண்டவர் தாம்கொடுப்பார்
மேன்மையதாகும் உலகம் அவர்பாதம்
வேண்டிப்பணியுமே ஞானப்பெண்ணே.

௱௨௬ ஞானிகள்சித்தம் வெகுளிகொண்டால்புவி
நாசமடைந்திடும் ஞானமதில்
மேன்மையைக்கண்டு விளம்பிடுங்காரியம்
மெத்தஅரிதாமே ஞானப்பெண்ணே.

௩௨௭ ஆண்டவருள்ளக் கிருபையினாலந்த
அற்புதஞானங் கிடைப்பதல்லால்
இண்டும்அஞ் ஞானிகளுக்குக்கிடைப்ப
தெளிதல்லபாரடி ஞானப்பெண்ணே.

௩௨௮ அப்படியாகிய ஞானத்தினால்வரும்
ஆனந்தமோட்ச சுகமதல்லால்
மெய்ப்படிவேறு சுகங்கிடையாதென்று
மெய்வேதஞ்சொல்லுமே ஞானப்பெண்ணே.

௩௨௯ மோட்சத்தின்வாசல் நெருக்கமதாகுமெய்
மோட்சவழியுஞ் சுருக்கமதாம்
ஆட்சியதாகிய மோட்சங்கிடைத்திடில்
ஆனந்தமாமடி ஞானப்பெண்ணே.

௩௩௰ மோட்சத்திலானந்தஞ் சொல்லிலடங்காது
மோசத்தினால்வரும் பாவங்களால்
தாட்சியதாகும் நரகத்தின்வேதனை
சாற்றுவேன்கேளடி ஞானப்பெண்ணே.

## ந ர க ம்.

வெளிப்படுத்தினவிசேஷம், உக. அ.

“பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்.”

௩௩௧ ஆண்டவருள்ளத்தி னால்வருங்கோபங்கள்
அக்கினிகெந்தகத் தாலெரியுங்
காண்டற்கரியதாஞ் சூதபாதாளங்
கடுநரகாமடி ஞானப்பெண்ணே.

௩௩௨ அந்நரகமும் மெத்தவிஸ்தாரம்
அதன்வழிதானும் விசாலமதாம்
வெந்திடுகின்ற நரகத்தில்வீழ்பவர்
மெத்தவும்உண்டடி ஞானப்பெண்ணே.

௱௩௩ நரகத்தின்வேதனை சொல்லிமுடியாது
நாலுவிதத்திலும் பொல்லாது
தரையின்அஞ்ஞானிகள் ஐயோநாளைத்
தவிப்பதுமெத்தவாம் ஞானப்பெண்ணே.

௱௩௪ கொலைகளவாசைபொய் மோசம்வேசித்தனங்
கோள்விபசாரங் குடிவெறியாம்
பலவிதபாவஞ் செய்வோர்கள்விழுவது
பாழ்நரகாமடி ஞானப்பெண்ணே.

௱௩௫ மிருகப்புணர்ச்சி சுயபுணராண்புணர்
வேடிக்கையாளர் வெகுதீனிக்கள்ளருந்
தரையிற்பொல்லாதவ ரென்றுபேர்கொண்டவர்
சார்வதுநரகமாம் ஞானப்பெண்ணே.

௱௩௬ கோயில்கள்கட்டி யுருவம்பலவைத்துக்
கும்பிடுகின்றபே ரெல்லோரும்
பாவிகளாகி நரகத்தில்வீழ்ந்து
பதைப்பார்கள்பாரடி ஞானப்பெண்ணே.

௱௩௭ கோயிலைச்சுற்றிக் குளம்பலமூழ்கியே
கோலக்கிரியைகள் செய்வோரும்
காயத்தைவாட்டி வருத்தித்திரிவோருங்
காண்பதுநரகமாம் ஞானப்பெண்ணே.

௱௩௮ தெருக்களைச்சுற்றித் திருவிழாச்செய்து
சிறப்பானவேடிக்கை காண்போரும்
உருக்குலைந்தக்கினிச் சூளையில்வெந்திட
உட்படுவாரடி ஞானப்பெண்ணே.

௱௩௯ தேரினைக்கட்டித் தெருவிலிழுத்துச்
சிலைமடிக்கத் துணிவோரும்
பேரமதிர்வெடி வாணத்தால்கொல்வோரும்
பெருநரகாள்வாரே ஞானப்பெண்ணே.

௱௪௰ தாசிகள்கேளிக்கை பார்ப்போருங்கொடுஞ்
சங்கீதவாத்தியங் கேட்போரும்
கூசிநரகினி லையோவென்றலறுங்
கூக்குரல்கேட்பாரே ஞானப்பெண்ணே.

௩௪௧ சக்கரைப்பொங்கல் தயிர்புளியோதனஞ்
சாத்தான்வருக்க வகைபுசிப்போர்
துக்கநரகினி லக்கினிகெந்தகஞ்
சூழ்ந்துபுசிப்பாரே ஞானப்பெண்ணே.

௩௪௨ கோயிலுக்கென்றுபோய் வேசியர்தங்களைக்
கூடித்திரிபவ ரெல்லோரும்
பேயினுக்காளாய்ப் பெருநரகத்திற்
புரண்டுதவிப்பாரே ஞானப்பெண்ணே.

௩௪௩ செடில்குத்தியாடுவோர் தீயைமிதிப்போர்
சிலைகரகமெடுத் தாடுவோர்
பொடியெழக்காயும் நரகத்தில்வீழ்ந்து
புலம்பியழுவாரே ஞானப்பெண்ணே.

௩௪௪ சத்திரங்கட்டியே பார்ப்பாரைவைத்தவர்
தங்கைதமக்கை மனைவியைச்சேர்பவர்
நித்தியவக்கினித் தீயினில்வீழ்ந்து
நிலையாயெரிவாரே ஞானப்பெண்ணே.

௩௪௫ மடத்தினிற்சன்யாசி யென்றுபேர்கொண்டங்கு
வந்திடும்பெண்களைச் சேர்ந்திடுவோர்
நடத்தைகள்கேட்டவர் நாளும்நரகினில்
நாடியெரிவாரே ஞானப்பெண்ணே.

௩௪௬ குருபூசைக்கென்றவர் வாங்கும்பொருட்களை
குலங்கெட்டகைம் பெண்டுகட்களித்துப்
பெருகுநரகினில் வீழ்ந்தெரிகின்ற
பெருமையைக்காண்பாயே ஞானப்பெண்ணே.

௩௪௭ காசினிதன்னில் வெகுபேர்கள்செய்யுங்
கனமானசேத்ரப் பொருளையெல்லாம்
வேசியர்க்கீந்து விபசாரஞ்செய்வோர்கள்
வெந்தழிவாரடி ஞானப்பெண்ணே.

௩௪௮ கோயில்விசாரணை செய்கின்றபேர்கள்
கூடும்பொருளினைக் கொள்ளையிட்டு
நாயிற்கடைகெட்ட பெண்களுக்கீந்து
நரகிலெரிவாரே ஞானப்பெண்ணே.

௱௪௯ தாயைப்பிதாவைக் குருவைப்பணியாத
சண்டாளரானபே ரெப்பொழுதுங்
காயும்நரகத்தில் வீழ்ந்தெரிகின்ற
கடுமையைப்பாரடி ஞானப்பெண்ணே.

௱௫௰ சேவித்தபேர்கள் பொருளைக்கொடாதவர்
செகத்திற்பெரியோரைத் தூஷணிப்போர்
பாவத்துக்கேதுவாஞ் சண்டைகள்செய்வோரும்
பாழ்நரகடைவாரே ஞானப்பெண்ணே.

௱௫௧ வாத்தியார்நாவிதர் வண்ணார்வயித்தியர்
மருத்துவச்சிதங்கள் கூலிகொடார்
காத்திருந்தங்கங்கே சூதாடுகின்றவர்
காண்பதுநரகமாம் ஞானப்பெண்ணே.

௱௫௨ மந்திரவாதிகள் சூனியஞ்செய்பவர்
மனதிற்கபடம் வைப்போர்களுடன்
தந்திரமாகவே பொல்லாங்குசெய்பவர்
சார்வதுநரகாமே ஞானப்பெண்ணே.

௱௫௩ அடுத்துக்கெடுப்பவர் பொய்ச்சாட்சிசொல்லு
ஆகுங்குடியைக் கெடுப்போர்கள் [வோர்
கடுத்திடப்பேசியே பிச்சைகொடாதவர்
காண்பதுநரகமாம் ஞானப்பெண்ணே.

௱௫௪ அகவிலைதன்னைக் குறைக்கின்றபேர்களும்
அன்னமிடுவோரைக் கன்னமிடுவோருஞ்
செகராசஆக்கினை தப்பிநடப்போருஞ்
சேர்வதுநரகமாம் ஞானப்பெண்ணே.

௱௫௫ பாவங்கள்தம்மை வெகுவாகச்செய்து
பலபுண்ணியத்தா லொழிப்போமென்போர்
போவதுபொல்லா நரகினிலங்கே
புரண்டுதவிப்பாரே ஞானப்பெண்ணே.

௱௫௬ பராபரன்தன்னையும் யேசுக்கிறிஸ்தையும்
பற்றுஞ்சுவிசேஷ மார்க்கத்தையுந்
தராதலந்தன்னிலே தூஷணிப்போர்களுஞ்
சார்வதுநரகமாம் ஞானப்பெண்ணே.

௱௫௭ சத்தியவேதச் சுவிசேஷப்போதகர்
தங்களைத்தூஷணஞ் செய்திடுவோர்
மெத்தத்தவிக்கும் நரகத்தில்வீழ்ந்து
மிகுதுன்பங்காண்பாரே ஞானப்பெண்ணே.

௱௫௮ கிறிஸ்தவர்தங்களை இனமதாகவே
கெட்டவசனத்தால் தூஷணிப்போர்
பொறுத்தற்கரிதாம் நரகினில்வீழ்ந்து
புழுங்கித்தவிப்பாரே ஞானப்பெண்ணே.

௱௫௯ சத்தியவேதத்தின் மார்க்கத்தைச்சேராத
சண்டாளநீச அஞ்ஞானியெல்லாங்
கத்தும்படியாம் நரகத்தில்வீழ்ந்து
கதறுவர்காண்பாயே ஞானப்பெண்ணே.

௱௬௰ பூசையறுட்டானஞ் செபதவமென்று
புலம்பித்திரியும் அஞ்ஞானியெல்லாம்
பேசற்கரிய நரகத்திலேவீழ்ந்து
பேதுறுவாரடி ஞானப்பெண்ணே.

௱௬௧ கல்லிரும்புசெம்பு மண்மரம்பூசித்தால்
காணுங்கதிவரு மென்றபொய்யைச்
சொல்லித்திரியும் அஞ்ஞானிகளெல்லாஞ்
சுடுநரகாழ்வாரே ஞானப்பெண்ணே.

௱௬௨ நெற்றியிற்பூதியும் நாமமும்பூசியே
நேர்ந்திடுஞ்சிவன் ராமனென்றுநிதங்
கத்தும் அஞ்ஞானிக ளானபேரெல்லாங்
கடுநரகாள்வாரே ஞானப்பெண்ணே.

௱௬௩ சடைமணிகாவியின் வேஷங்கள்போட்டுச்
சகத்தைமிரட்டித் திரிபவர்கள்
கொடுமையதாகும் நரகத்தில்வீழ்ந்து
குமுறியெரிவாரே ஞானப்பெண்ணே.

௱௬௪ சன்யாசியானபேர் பல்லக்குவாகனந்
தானுலகாடம்பரஞ் செய்வோர்
சென்னியில்அக்கினித் தீவிட்டெரிந்திடச்
சிதைந்தழிவாரடி ஞானப்பெண்ணே.

௱௬௫ கொண்டமனைவி சிறப்பாயிருக்கக்
குடிசைமகளீரைத் தேடுபவர்
துண்டத்தனஞ்செய்யும் பேயோடுகூடித்
துயர்நரகாழ்வாரே ஞானப்பெண்ணே.

௱௬௬ பத்தாவைவிட்டுப் பரத்தையராகிப்
பயல்களைத்தேடித் திரியும்பெண்கள்
நித்தியஅக்கினி சுற்றும்நரகினில்
நின்றெரிவார்களே ஞானப்பெண்ணே.

௱௬௭ நஞ்சுதின்றிறப்போர் நான்றுகொண்டிறப்போர்
நாணுசலங்களில் சாடியிறப்போர்
மிஞ்சியெரியும் நரகத்தில்வேதனை
மெத்தப்படுவாரே ஞானப்பெண்ணே.

௱௬௮ வெட்டிப்பறிப்போரும் வெகுகொள்ளைக்காரரும்
வீட்டிற்பொருளைத் திருடுவோரும்
மட்டுப்படாத நரகத்தில்வீழ்ந்துயிர்
மாளநினைப்பாரே ஞானப்பெண்ணே.

௱௬௯ நரகத்தில்வீழ்ந்தவர் படுகின்றவேதனை
நானுவிதத்திலும் பொறுப்பரிதாம்
பரகதிசேர்வதற் கெண்ணங்கொண்டால்அது
பாழாய்முடியுமே ஞானப்பெண்ணே.

௱௭௰ யேசுக்கிறிஸ்துவின் பாதத்தைநம்பி
இனியபரகதி சேராமல்
நீசஅஞ்ஞானிக ளானபேயெல்லாம்
நெடும்நரகாள்வாரே ஞானப்பெண்ணே.

௱௭௧ பலவிதபாவங்கள் செய்தஅஞ்ஞானப்
பசாசுகளானபே ரெல்லோருந்
தலைமயக்குற்றுத் தடுமாறிநரகினில்
தாம்விழுவார்களே ஞானப்பெண்ணே.

௱௭௨ ஐயையோஇந்த உலகத்தஞ்ஞானிக
ளானவெகுபேர்க ளெல்லோரும்
மெய்யாய்நரகினில் வீழ்ந்தெரிகின்றதை
மீளமாட்டாரடி ஞானப்பெண்ணே.

# வாழ்த்து.

எபேசியர், ௧. ௩.

"நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்தவினுடைய
பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்."

௱௭௩ வானமும்பூமியு மற்றுளயாவையும்
வகுத்தபராபரன் தான்வாழ்க
ஞானம்பெருகிடு மேசுவின்பாதங்கள்
நன்றாகவாழ்கவே ஞானப்பெண்ணே.

௱௭௪ சத்தியவேதச் சுவிசேஷமானதுஞ்
சாற்றுமதின்துய்ய நியமங்களும்
நித்தியமாகப் பெருகியேயெங்கெங்கும்
நீடூழிவாழ்கவே ஞானப்பெண்ணே.

௱௭௫ போதகரான குருமார்களெல்லோரும்
போதிக்கும்வேத ப்ரசங்கங்களும்
நீதியதாகவே நீணிலந்தன்னிலே
நீடூழிவாழ்கவே ஞானப்பெண்ணே.

௱௭௬ சத்தியவேதத்தை நம்புங்கிறிஸ்தவர்
தாரணிதன்னிலே வாழ்ந்திடுக
முத்திகொடுத்திடும் ஞானத்தினல்மனம்
முற்றியேவாழ்கவே ஞானப்பெண்ணே.

௱௭௭ இங்கிலிஷ்ராஜ துரைத்தனத்தோர்களும்
எப்பொழுதுமே களிப்பாய்வாழ்க
தங்கும்பராபரன் அன்னவர்க்கேஜெயந்
தந்தெங்கும்வாழ்கவே ஞானப்பெண்ணே.

முற்றிற்று.